**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I
8073063

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District / மாவட்டம்: கன்னியாகுமரி   PS / காவல்நிலையம்: V&AC   Year / ஆண்டு: 2019   FIR No / முதல் அ. எண்: 01/2019   Date / நாள்: 17.02.19.

2. (i) Act சட்டம்: Cr.P.C   Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (Amended in 2018)   Sections பிரிவுகள்: Sec.7.
   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்:

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள்: 16.02.2019   Date from / நாள் முதல்:   Date to / நாள் வரை:
   Time Period / நேர அளவு: Before 20.55 on 16.02.19   Time from / நேரம் முதல்:   Time to / நேரம் வரை:
   (b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 17.02.2019   Time / நேரம்: 02.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time / நேரம்: 02.30 hrs.

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய்மொழியாக: Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: Office of the Asst. Exe. Engineer at the office of Asst Director of Town Panchayat, Nagercoil)
   Beat Number : / முறைக் காவல் எண்   (b) Address : / முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : / மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: திரு. சு. திருவாழி   (b) Father's/ Husband's Name : / தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : / நாள் / பிறந்த ஆண்டு   (d) Nationality : / நாட்டினம்   (e) Passport No. : / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : / வழங்கப்பட்ட நாள்   Place of Issue : / வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : / தொழில்: தனி தாசில்தார், ஆலய பாதுகாப்பு திட்டம், சேரவாரணம்.   (g) Address : / முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. M. மாடசாமி சுந்தரராஜ், வயது 50/2019 த/பெ. மாடசாமி, உதவி செயற் பொறியாளர், O/o. the Asst. Director, Town Panchayat, Nagercoil.

8. Reasons for delay in reporting by the complainant/ Informant: / குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — இல்லை —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 17/2/19

Signature of the ~~Officer-in-charge~~ Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் [signature]

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.02.2019 at 09.00hrs,

Name: பெயர் பெ. மதியழகன்,
Rank: நிலை ........................No. எண் ..........
துணை காவல் கண்காணிப்பாளர்,
உ.த.க. பிரிவு,
@ கன்னியாகுமரி மாவட்டம்
நாகர்கோவில்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

<u>கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டாட்சியர் (சமூக பாது காப்பு திட்டம்) அவர்களின் செயல்முறை நடவடிக்கை</u>

16.02.2019-ம் தேதி இரவு சுமார் 08.55 மணியளவில் நாகர்கோவிலில் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்ற திடீர் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை குறிப்பு.

<u>முன்னிலை:</u>

1) திரு.க.திருவாழி,
வட்டாட்சியர் (சமூக பாது காப்பு திட்டம்),
தோவாளை,
இருப்பு பூதப்பாண்டி,
கன்னியாகுமரி மாவட்டம்.

2) திரு.G.மதியழகன்,
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை.
கன்னியாகுமரி பிரிவு.
நாகர்கோவில்.

3) திரு.J.ராஜு,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை,
கன்னியாகுமரி பிரிவு,
நாகர்கோவில்.

நாகர்கோவிலில் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக பேரூராட்சிகளின் உதவி செயற் பொறியாளர் திரு.மாடசாமி சுந்தரராஜ் என்பவர் பேரூராட்சிகளில் நடைபெறவுள்ள வேலைகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கவும், அதை தொடர்ந்து வேலைகள் செய்து முடித்தபின்னர் அந்தவேலைகளுக்கு செக் மெஷர்மென்ட், வேலை முடிவறிக்கை மற்றும் வேலைக்கான பட்டியலுக்கு மேலொப்பம் செய்வது போன்றவைகளுக்கு ஒப்பந்தக்காரர்களிடம் லஞ்சம் பெற்று வருவதாக ரகசிய தகவல் கிடைத்ததன் அடிப்படையில் இன்று 16.02.2019-ம் தேதி இரவு சுமார் 08.55 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவக பிரதான வாசல் வழி வெளியே வந்த உதவி செயற்பொறியாளரின் வாகனமான TN-74-G-0398 எண்கொண்ட மஹீந்திரா பொலீரோ வண்டியை திடீர் சோதனைக்காக மறிக்கப்பட்டது. அந்த இடமானது மாவட்ட ஆட்சியர் அலுவலக பிரதான வாசல் என்பதால் அந்த இடத்தில் வைத்து திடீர் சோதனை மேற்கொண்டால் பொதுமக்கள் கூட்டம் கூடிவிடுவார்கள் என்பதாலும் அதன் முன்பக்கம் திருவனந்தபுரம் கன்னியாகுமாரி பிரதான சாலை எனபதால் போக்குவரத்து நெரிசல்

ஏற்படும் என்பதாலும் அந்த வண்டியில் இருந்த பேரூராட்சி உதவி செயற் பொறியாளர் திரு.மாடசாமி சுந்தரராஜ் என்பவரை அவரது வாகனத்துடன் அழைத்துக்கொண்டு அவரது அலுவலகமான அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் வடக்கு பார்த்த வாசல் கொண்ட புது அரசு கட்டிடத்திற்கு வரப்பட்டது. அந்த கட்டிடமானது மூன்று தளங்கள் கொண்ட கட்டிடமாகம். முதல் தளத்தில் மெயின் ஹாலும் அதை தொடர்ந்து வலது பக்கம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் நிர்வாக அலுவலகமும் உள்ளது. இந்த அலுவலகத்தில் CCTV Camera பொருத்தப்படடு உள்ளது. பேரூராடசிகளின் உதவி செயற் பொறியாளர் திரு.மாடசாமி சுந்தர்ராஜ் அவர்கள் வந்த வாகனம் TN-74-G-0398-ஐ பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக போர்டிகோவில் நிறுத்தி அந்த வாகனத்தில் சோதனை செய்யப்பட்டது. அப்போது அந்த வாகனத்தில் பேரூராட்சிகளின் உதவி செயற் பொறியாளர் திரு.மாடசாமி சுந்தரராஜ் முன் சீட்டிலும், பின் சீட்டில் உதவி இயக்குநர் அலுவலக இளநிலை உதவியாளர் திருமதி.சித்ரா என்பவரும் மற்றும் அவருடைய வாகன ஓட்டுனர் திரு.S.ராஜா என்பவரும் உடன் இருந்தாகள். அந்த வாகனத்தின் பின் பக்கமுள்ள பேபி சீட்டில் இருந்த திரு.மாடசாமி சுந்தரராஜ் அவர்களின் Ash colour Bag-ஐ கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை காவல் துணை கண்காணிப்பாளர் திரு.G.மதியழகன், ஆய்வாளர் திரு.ஜெ.ராஜு ஆகியோர்கள் முன்னிலையில் கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.திருவாளி அவர்களால் சோதனை செய்யப்பட்டது. திரு.மாடசாமி சுந்தரராஜ் அவர்களின் Ash colour Bag-ன் நடு அறையில் தனித்தனியாக ரப்பர் பேண்ட் போட்டு வைத்திருந்த 5 கட்டு ரூபாய் நோட்டுகள் இருந்தது. அதில் 48 இரண்டாயிரம் ரூபாய் நோடடு ஒரு கட்டாகவும், 2-வது கட்டில் 100 ஐநூறு ரூபாய் நோட்டுக்களும், 3-வது கட்டில் 59 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் மற்றும் 24- 500/-, ரூபாய் நோட்டுகளும் 4-வது கட்டில் 26 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்களும் 61 ஐநூறு ரூபாய் நோட்டுக்களும் மற்றும் ஒரு 200 ரூபாய் நோட்டும் 5-வது கட்டில் 16 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்களும் 14 ஐநூறு ரூபாய் நோட்டுக்களும் மற்றும் இரண்டு 100 ரூபாய் நோட்டுக்களும் மொத்தம் ரூபாய் 3,97,900/- இருந்தது. மேலும் அவரது மணிபர்சை சோதனை செய்தபோது அதில் இரண்டு மடிப்பாக ரூபாய் நோட்டுக்கள் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு மடிப்பில் 3 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்களும் 10 ஐநூறு ரூபாய் நோட்டுக்களும் இன்னொரு மடிப்பில் மொத்தம் 480/-(200x1, 100x2, 20x3, 10x2) ரூபாயும் மொத்தம் ரூபாய் 11,480/- இருந்தது. இந்த திடீர் சோதனையின் பொழுது பேரூராட்சிகளின் உதவி செயற் பொறியாளர் திரு.மாடசாமி சுந்தர்ராஜ் என்பவரிடம் அவரது Bag-லிருந்த பணத்தை பற்றி கேட்டதற்கு அவர் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். அதுபோல அவரது

மணிபர்சில் வைத்திருந்த பணத்தை பற்றி கேட்டதற்கு அவர் இரண்டு நாட்களுக்கு முன் ATM-லிருந்து எடுத்தபணம் என்று தெரிவித்தார். அதற்கான ATM slip அல்லது Cell Phone-ல் வந்த குறுந்தகவலை காண்பிக்குமாறு கேட்டதற்கு அவர் ATM slip இல்லை என்றும் குறுந்தகவல் வரவில்லை என்றும் தெரிவித்தார். அவரது Bag-ல் வைத்திருந்த பணத்திற்கு எந்த விளக்கமும் கூறாததாலும் மணிபர்சில் இருந்த பணத்திற்கு கூறிய பதில் திருப்திகரமாக இல்லாததாலும் Bag மற்றும் மணி பர்சில் வைத்திருந்த பணங்கள் லஞ்சமாக பெற்றதாக இருக்கலாம் என்பதால் மேல் விசாரணைக்காக அந்த மொத்த ரூபாய் 4,09,380-ஐ இந்த செயல்முறை நடவடிக்கைமூலம் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது ஓட்டுனர் திரு.ராஜா என்பவரை சோதனை செய்தபோது அவரது மணிபர்சில் மொத்தம் ரூபாய் 780/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அந்த பணம் தான் அலுவல் முடித்து வீட்டிற்கு போகும்போது வீட்டு சாமான்கள் வாங்குவதற்கு வைத்திருந்த சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. வாகனத்தில் இருந்த இளநிலை உதவியாளர் திருமதி.சித்ரா என்பவரிடம் அவர் பணம் எதும் வைத்துள்ளாரா என்று கேட்டபோது அவர் தன்னிடம் பணம் ஏதும் இல்லை என்று தனது கைப்பையை திறந்து காண்பித்தார். பின்னர் அந்த கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள உதவி செயற் பொறியாளரின் அலுவலக அறையும் சோதனை செய்யப்பட்டது. அந்தச் சோதனையில் எந்த ஆவணங்களும் கைப்பற்றப்படவில்லை.

பேரூராட்சிகளின் உதவி செயற் பொறியாளர் திரு.மாடசாமி சுந்தரராஜ் என்பவரை விசாரித்து அவரிடம் ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது. அவரது வாக்குமூலத்தில் இன்றைய தினம் ஆரல்வாய்மொழி பேரூராட்சியின் ஓவர்சீயர் திரு.பாபு மற்றும் புதுக்கடை ஓவர்சீயர் திரு.போசின் ஆகியோர்கள் அவர்களது சரகத்தில் நடைபெற்ற பணிகளுக்கான செக் மெஷர்மெண்ட், பணி முடிவறிக்கைகள் மற்றும் DPR அகியவற்றில் கையெழுத்து வாங்கி சென்றதாகவும், கருங்கல் ஓவர்சீயர் திரு.ராஜேஷ் மற்றும் கன்னியாகுமரி ஓவர்சீயர் திரு.கமால் ஆகியோர்கள் வந்து DPR-ல் கையெழுத்து வாங்கி சென்றதாகவும் தெரிவித்தார்.

இந்த திடீர் சோதனையின் மூலம் பேரூராட்சிகளின் உதவி செயற் பொறியாளர் திரு.மாடசாமி சுந்தரராஜ் என்பவர் ஒப்பந்தக்காரர்களிடம் வேலை முடித்து செக் மெஷர்மெண்ட், வேலை முடிவறிக்கை மற்றும் வேலைக்கான பட்டியலுக்கு மேலொப்பம் செய்ய லஞ்சம் பெறுவதாக தெரிய வருகிறது. மேலும் பொது ஊழியரான உதவி செயற் பொறியாளர் அரசு பணியை செய்ய லஞ்சம் பெற்று குற்றமுறு நடவடிக்கையில் (Criminal Misconduct) ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது. இந்த நடவடிக்கை குறிப்பு லஞ்ச

(signature) 14/2/18

ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மடி கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட பிரிண்டர் மூலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக நிர்வாக பிரிவு அலுவலகத்தில் உள்ள மின் இணைப்பு மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது. இந்த சோதனைக்கான செயல்முறை நடவடிக்கைகள் இன்று 16.02.2019-ம் தேதி இரவு 23.40 மணிக்கு முடிக்கப்பட்டது.